# பிரஜானுகூலன்.

பருவம். 2. } 1905௵ ஏப்பிரல்மீ } இலக்கம் 1.

## விஞ்ஞாபனம்.

சர்வேஸ்வரனது கிருபா கடாக்ஷத்தால் நமது பிரஜானுகூலன் பத்திரிகைக்கு சென்ற மாதத்துடன் ஒருவருடம் பூர்த்தியாகி இம்மாதத்தில் இரண்டாவது வயது பிறந்திருக்கின்றது. சென்ற வருடத்தைவிட இந்நடைபெறு மாண்டில் நமது பிரஜானுகூலன் நமது நண்பர்களின் பிரீதிக்குப் பாத்திரனாகி அதியுன்னதமாய்ப் பிரகாசிப்பா னென்பதை யறிவிக்க மிகவும் சந்தோஷிக்கின்றோம். பிரதம ஸம்வத்ஸரத்தில் விஷய தானம் புரிந்து இப்பத்திரிகையை அலங்கரித்து வந்த நம் நிரூப சிரேஷ்டர்கள் இவ்வருடமும் இனிமேலும் அங்ஙனமேசெய்யச் சிறிதும்பின்வாங்கமாட்டார்களென்றேநம்புகின்றோம். இளைப்புற்று வருமொருபாட்டைசாரியானவன் சத்திரமொன்றைக் கண்டடையு மானந்தத்தைப் பார்க்கினும்; தக்க தருணத்தில் இப்பத்திரிகைக்கு உதவிசெய்து போஷகராயிருந்துவரும் நமது நண்பர் மகா-ள-ள-ஸ்ரீ T. M. பொன்னுசாமி பிள்ளையவர்கள் நமது அனுகூலன் விஷயத்தில் வைத்திருக்கும் அபிமானத்தை யறிய எய்தும் மகிழ்ச்சியே அதிகமாயிருக்கின்றது. கனம் நண்பரவர்கள் நமது பத்திரிகைக்கு என்றும் போஷகராயிருந்து சர்வானுகூலராய் விளங்கி ஸத்கீர்த்தியடைவாராக. சென்ற ஸம்வத்ஸரத்தில் இப்பத்திரிகையை ஆதரித்து வந்த சந்தாதாரர்கள் இதைக் கைவிடாமல் இவ்வருடமும் அபிமானிக்க முன் வந்திருப்பதை யறியச் சாலவும் சந்தோஷிப்பதோடு இப்படியே என்றும் ஆதரித்து வருமாறு அவ்வுத்தம சீலர்களை யாம் பெரிதும் வேண்டிக் கொள்ளுகின்றோம். நமது ஆபீஸ் வேலை அதிகரிப்பால் கேலண்டர் புதிதாக அச்சிடுவதற்கு சாத்தியப் படவில்லை யாகலான் இத்திரிசிரபுரியின்கண் 'திரிச்சிநேசன்' 'திராவிடபோதினி' பத்திரிகைகளின் ஆசிரியராயிருந்த நமது ஆப்த மித்திரர் மகா-ள-ள-ஸ்ரீ M. D. சுப்பிரமணியபிள்ளை யவர்களுடைய கம்பெனியின் கேலண்டரை அனுப்பியிருக்கின்றோம். நமது நண்பர்கள் நம்மீதும் நமது பத்திரிகையின் மீதும் வைத்திருக்கும் அபிமானத்தையும் அன்பையும் எம்மிதய பரிபூரணமாய்த் தெரிந்திருக்கின்றோ மாகலான் அவ்வுத்தம சீலர்களின் பேரானந்தப் பெருக்கை அபிவிருத்தியடையச் செய்யுமாறு அச்சிடப்பட்டுவரும் அத்யத்புத கதையாகிய ஹிருதயானந்தினி இன்னும் முடிவடையாத காரணங்கொண்டு இம்மாதத்திய சஞ்சிகையுடன் அனுப்பக்கூ

டவில்லை. அடுத்த மாதக் கடைசிக்குள் புத்தகம் அச்சிடப்பட்டு முடிவடைந்துவிடு மாகலின் ஜூன் மாதத்தில் அனைவருக்கும் அனுப்பப்படுமாதலால் நமது நேயர்கள் மன்னிப்பார்களாக. கடவுளுடைய பிரீதி பக்தனிடமே யூன்றுவதுபோல் நமது சந்தாதாரர்களின் அபிமானம் பிரஜாநுகூலன் பத்திரிகையையே நாடியிருக்கவேண்மென்பதுநமது பிரார்த்தனை. பயனுள்ள விஷயங்களை யடக்கிக் கொண்டிருக்கும் பிரஜாநுகூலன் பத்திரிகையின் அருமை பெருமைகளை நன்குணர்ந்த நமது அன்பர்கள் இப்பத்திரிகையை யெப்போதும் ஆதரித்து வருவார்களென நம்புகின்றோம். சர்வலோக சரண்யராகிய ஜகதீசன் நம் எல்லோரையும் இரக்ஷிப்பாராக. மங்களமஸ்து.

பத்திராதிபர்.

## உள்ளது விள்ளல்.

**வா**ய்மையாவது ஒருவனுக்கு எத்தகைய இடுக்கண் உறினும் உண்மையேபேசுதல். நெடியகடல்சூழ்ந்த இப்பூவுலகின் கண்ஒருவன் பொய்யனென்று ஐயப்படுவதற்கு ஆளாவதைப்போல், மனவேதனையை யுண்டாக்குவது பிறிதொன்றுமில்லையென்பது திண்ணம். இப்பழிப்பை ஒருவன் ஒருகணமேனும் பொறுத்தலரிது. இதுநியாயத்துக்கும் ஒத்ததே; பொய்யனென்று புகலப்படுவது சாலவும் அவமதிப்பை விளைக்கத்தக்கது. அப்படியிருப்பினும் நாம் வாய்மை யுடையவர்களாக விருக்கச் சிறிதுங் கருத்துக்கொள்வதில்லை. நம்மை யுள்ளபடியன்றி வேறுவகையாகத் தோற்றுவிக்கவும் நமது மனத்தின் கண் இல்லாததை வாயினாலுரைக்கவும் நாம் முயலாத நாளுமில்லை நிமிஷமுமில்லை விநாடியுமில்லை. நாம் யாதாயினும் ஒரு வழியில், எவ்வித காரணம் பற்றியோ, நம்மனத்தின் கண்ணுள்ள உண்மையென்னும் ஸ்படிகத்துக்குச் சமானமான வெண்மலரை மலினமாக்குகின்றோம். இங்ஙனமாவதற்குக் காரணமென்னவெனச் சற்று விசாரிப்போம். சிறுவர்களும், சிறுமிகளும் தாம் தாம் செய்த குற்றத்தினின்றும் தப்பித்துக்கொள்ள வேண்டுமென்ற கருத்தினாலேயே பொய் புகலும்படி நேரிடுகின்றது. அவர்கள் ஏதேனும் ஒரு குற்றத்தைச் செய்து அக்குற்றத்தை ஏற்றுக்கொள்ள அஞ்சி அக்குற்றமாவது அதனால் விளையும் கேடாவது பிறர்மேல் சாரும்படி ஒரு பொய்க் காரணஞ் சொல்லி மறைக்கின்றனர். தாம் செய்த குற்றமாவது, வேறு எவ்வகைப் பிழையாவது வெளிப்படுமாயின், நம்மைத்துன்பத்துக் குள்ளாக்கிவிடுமென்பதைத் தெரிந்தபோது சிலவேளை அவற்றைத் தாமே செய்ததாக ஏற்றுக்கொள்வது கடினமே. ஆயினும் அக்குற்றம் நாமே புரிந்ததாக ஒப்புக்கொண்டு தற்காலம் அதற்கேற்ற தண்டனைக்குடன்படுவது நல்லதா? அன்றிப் பொய் சொல்வதாகிய பெரும் பாவத்துக் குள்ளாகி ஏன் செய்தோமென மனம் பரிதபித்து எப்பொழுது குற்றம் வெளியாய் விடுமோவெனப் பயந்துகொண்டிருப்பது நல்லதா? ஆராய்ந்து பார்க்குமளவில் முற்கூறிய படி செய்வதே நலம்.

தாம் செய்த பிழையை தைரியமாய் ஒப்புக் கொண்டு வெளிப்படையாய்ப் பொய் சொல்லப் பின் வாங்குகிறவர்கள் அநேகருளர். ஆயினும் அவர்கள் முற்றிலும் யதார்த்தவாதிகளாகார்கள். அதிசயோக்தியாய் அணுவை மேருவாகக் கற்பித்துக் கூறுவிடினும் மிதமிஞ்சிப் பேசு

இறவர்கள் பலருளர். அவர்களும் யதார்த்தவாதிகளாயிருப்பது அருமைதான். பலவகையான பொய்களினும் எள்ளளவு உண்மை கலந்த பொய்யே மிகப் பொல்லாத பொய்யாகும். முற்றும் பொய்யா யிருப்பதைக் கண்டுபிடித்து வெல்லலாம். பாதி மெய்கலந்த பொய்யை வெல்வது தான் வருத்தமானது. தான் பொய்யென்று தெரிந்தும் அதைப் பேசினால் தன் மனமே தன்னைக் கெடுக்கும். உண்மை சொல்லுமொருவன் தவம் தானம் செய்பவரினும் மேலானவன், பொய்சொல்லாமையேபுகழ். அது வெல்லாத் தருமங்களையுங் கொடுக்கும். நீரால் உடம்பு சுத்தப்படுத்தப் படுமாறுபோல், அகம் வாய்மையால் சுத்தப் படுத்தப்படும். சந்திரன் சூரியன் எவ்வாறு உலக விருளைப் போக்குமோ அவ்விதம் அகத்திருளைப் போக்க வல்லமை யுள்ளதாம் வாய்மை. மெய் சொல்லுகிறவனுக்குஅதனால் ஒரு கேடு வந்ததாயினும். அவனுள்ளத்தில் மகிழ்ச்சியே பெரிதும் உண்டாகும். அவன் பகைவர்களும் அவனை நன்கு மதிப்பார்கள். பிறராலே நன்கு மதிக்கப்படவும்தன் காரியம் சித்தி பெறவும் ஒப்புமொருவன் மெய்யே பேசல்வேண்டும். ஒருவன் தன்மனம் அறிந்ததொன்றைப் பிறர் அறிந்திலர் என்று பொய் பேசாதிருக்கக் கடவன். பொய் சொன்னானாயின், அவன் மனமே அப்பாவத்துக்கு சாட்சியாய் நின்று அவனைச்சுடும். உண்மை சொல்லு மொருவன் இம்மையில் கீர்த்தியையும், பொருளையும், மறுமையில் புண்ணியலோகத்தையுமடைவான். உலகப் பிரசித்தமான அரிச்சந்திரன் கதையும் இங்கு நோக்கற்பாலது.

சத்தியத்தின் மிக்க தருமமும் அசத்தியத்தின் மிக்கபாவமும் இவ்வுலகில் ஒன்றும் இல்லை.

க. வீ. சந்தானகிருஷ்ண நாயுடு.

# மதுபானம் மதியீனம்.

**ப**ஞ்சமகா பாதகங்களி லொன்றாகிய மதுபானஞ் செய்கிற மதியீனர்கள் பணத்தைக் கொடுத்துப் பைத்தியத்தை விலைக்கு வாங்குவது போல் விலக்கற்கரிய பல துன்பங்களுக்கு ஆளாகின்றார்கள். அவர்களுடைய குடியே குடியைக் கெடுக்கின்றது. தாயென்றும், தாரமென்றும், மேத்திய மென்றும், அமேத்தியமென்றும், நல்வினையென்றும், தீவினையென்றும், கீர்த்தியென்றும், அபகீர்த்தியென்றும், சாரமென்றும், அசாரமென்றும் பேதந்தெரியாமல் வீட்டை விற்று, மானங் கெட்டு, மரியாதை கெட்டு, மதிகெட்டு, விதி கெட்டு, பெண்சாதி ஒருபக்கம், பிள்ளைகளொருபக்கம், ஜனத்தா ரொருபக்கம், தாங்களொரு பக்கமாய்த் திரிகிற குடியர்களுடைய பெருமையை என்னென்று சொல்லலாம். அன்னோர்க்கு கள்ளுக்கடையே காணியாட்சி, குப்பை மேடே குடியிருப்பு, புழுதியே போர்வை, சாம்பலே சப்ரமஞ்சம், சாணியே தலையணை, ஆகாசமே ஆடை, மதுபானமே அவர்களுக்கு ஸ்நாநபானம், வறுமையே அவர்களுக்குத்துணை. கள்ளையோ, சாராயத்தையோ குடித்தவுடனே அவர்கள் தங்கள் சரித்திரங்களைத் தாங்களே சொல்லிக்கொள்ளுகிறவர்களாதலால் நாம் இங்கே அவர்கள் மகத்துவத்தை விஸ்தரித்துச் சொல்லவேண்டுவதில்லை. "கள்ளைக் கொடுத்து உள்ளதைக்கேள்" "சாராயத்தைக் கொடுத்து பூராயத்தை யறி" என்னும் பழமொழிகள் வழங்குகின்றனவே. கள்ளுக்குச் சொல் விளம்பி யென்னும் ஒரு பெயருண்டன்றோ?.

"போதைக்காரன் பேச்சு பொழுது விடிந்தால் போச்சு" என்ற

படி சொல்லாததைச்சொல்லி தின்னாததைத்தின்று செய்யாததைச் செய்து, வாயில் வந்ததைக் கண்டபடி பிதற்றி, எங்குந்திரிந்து விழுந்து கிடந்து, எழுந்துகடந்தால் இடறிவிழுந்து, குடிக்க இல்லாதபோது கொள்ளையடித்து சூதாடி கண்டவர்களை வைது கன்னமிட்டு கடுந்தண்டனை அடையும் குடிகாரரின் பரிதாபஸ்தியை நாம் கண்கூடாகக் கண்டிருக்கிறோமே.

மனிதருக்கும் மிருகத்திற்கு முள்ள பேதமெல்லாம் பகுத்தறிவுடைமை யொன்றேயாதலால் அந்த அறிவை மயக்கத் தக்க மதுவை யருந்துவோ ரெவரும் மிருகத்தன்மையடைவாரென்பது தோற்றம். அஃதெவ்வாறெனில், கள், சாராய மருந்துவோர்க்கு அறிவு மயக்கம் நேர்ந்தவழி தங்கள் முன்னிற்போர் இன்ன இயல்பினரெஃபதும், இன்ன முறையினரென்பதும், அவரிடத்துத் தாமிருக்கவேண்டியகிரமம்இத்தன்மைத்தென்பதும் அவர்களோடு இவ்வண்ணமாய் வார்த்தையாட வேண்டுமென்பதும், தாம் இருக்குமிட மின்னதென்பதும், தமது கோலம் இவ்வாறிருக்கின்றதென்பதும் அறிந்து கொள்ளாதிருக்கும்படி அறிவு மயங்கியிருப்பதால் அத்தருணத்தில் அவர்கள் தன்மை மிருகத் தன்மையே யென்று சந்தேகமறச் சொல்வது சர்வசம்பிரதிபன்னமேயாம்.

அந்தோ! மதுபானம் செய்வோர்கள் அறிவு மயக்கத்தாற் கண்ணிருந்துங்குருடாயும் காதிருந்துஞ் செவிடராயும் வாயிருந்தும் ஊமையாயும், கல்வியிருந்தும் மூடராயும் செல்வமிருந்துந்தரித்திரராயும் காணப்படுவார்களேயொழிய எக்காலத்துந்தங்கள் இயற்கை சுபாவத்தோடு விளங்க மாட்டார்கள். மேலும் இக்கள் சாராயம் அருந்துவதால், அறிவு, முயற்சி, மானம், மறியாதை அழிவதுடன் பரிவின் மிகுந்த மாதாவும், பக்தியுடைய பத்தினியும், ஆர்வம் நிறைந்த சோதரரும், பிரியம்மேவும் பிள்ளைகளும் கோபித்து வெறுத்து அசூயை அடையும்படி நேரும். அன்றியும் மது மயக்கத்தால் மானங்கெட்டு நாணமிழந்து திரிகையில் குடிகாரரைக் கண்டோர் அசோதன ஜந்துவைக் கண்டாற்போலும், தீயபாதகரைப் பார்த்தாற் போலும் அஞ்சிப் பயந்து இகழ்ந்துவிலகுவர். காமம் எவ்வாறு ஒழுக்கங்களைக் கெடுக்கின்றதோ அவ்வாறே குடியும் அறிவைக்கெடுத்து மயக்கத்தை விளைவிப்பதால் இக்குடி காமத்திற்கு முற்பட, வைக்குந்தரமுடையதாகின்றது. செல்வராயினும், சிறந்த அரசராயினும், தேர்ந்த கற்றோராயினும், அன்னோர் மதுபானப் பழக்க முடையோராயின் சின்னாளைக்குள் அன்னோர் நன்னீர்மை முதலிய பன்னலமுங் கெட்டுப் பாழ்படுவர். தமது ஊழியராலுங்கூடத் தூஷிக்கப்படுவர்.

ஆகவே பெரியோர்களால் துன்மார்க்கனென்னும் பட்டப்பெயரடைந்து மதிப்புக்கெட்டுப் போகவேண்டுமென்று விரும்புகின்றோர் யாரோ அவர்களே இம்மதுவை யருந்துதல் வேண்டும்.

“உண்ணற்க கள்ளை யுணிலுண்க சான்றோரால்
எண்ணப்படவேண்டாதார்”

என நீதி நூல் கூறுகின்றது. பிதுரார்ஜ்ஜிதமாகவோ, ஸ்வயார்ஜ்ஜிதமாகவோ தமக்குக் கிடைத்த பொருளைக் கொண்டு அறவழியே அபிவிர்த்தி செய்து, அறிவு விர்த்தியைத் தேடிப் புகழடைந்து பலராலும் நன்கு மதிக்கப்படுவதை விட்டு அப்பொருளைத் தகாத வழியிலழித்து, அறிவைக்கெடுத்துக்கொண்டு, நீங்காப்பழிப்பூண்டு அசேதனராலும் இகழ்ந்துரைக்கும்படி நடந்து வறியவராகி விடுவது எவ்வளவு மதியீனம்? மதுவுண்ட ஒருவன் மதுமயக்கத்தாற் கால்வாயென்றும், சலதாரை யென்றும், வீதி

யென்றும், வீடென்றும், புறத் திண்ணையென்றும், புழக்கடை என்றும் தெரியாமல் விழுந்து கிடப்பதைப் பலகாற் கண்ணுறக்கண்டும் ஐயோ, இதனை யுட்கொண்டால் நம்மையும் இப்படித்தானே நாசப்படுத்துமென்று கொஞ்சமும் உணராமல் மேலும் மேலும் அக்குடியை விரும்பும் கொடிய குடியரை எவர்தான் நகையார்? இக்கள் சாராயங்களைக் குடிப்போர் நிச்சயமாகவே மீட்டுமிழ்கலா எரிவாய் நிரையத்தின் வாயிலை யணுகி நெருங்கிப் போகிறார்களென்னலாம். மதுபானம் அறிவை மயக்குவதால், மலத்தை அமுதமாகப் புசிக்கவும், அக்கினியை மலர்ந்த புஷ்பமென கையிலெடுக்கவும் கொடுமை விளைவிக்கத்தக்க விரோதிகளிடத்து நேராயகப்பட்டுக் கொள்ளவும் செய்யும். மதுபானிகளுக்கு விளையும் உரையாலளப்பருந்தீமைகளை வரையறுத்துக்கூற எவர்தரம்? 'மதுவை யருந்துவோரடையுங் கஷ்டங்கள் கோடி கோடி பல்லாயிரங் கோடி என்போம். அத்தனை தீங்கும், கஷ்ட நஷ்டங்களும் இம்மதுவை யருந்துதலொன்றாலேயே நேர்ந்தன என்பதைச் சத்திய புத்தியுடன் தெள்ளிதில் தெரிந்துகொண்ட ஒருவன் மீண்டும் அதனை யருந்துவானாகில் அவனை மிருகங்களினும் கடைப்பட்ட மிருகமென்று சொல்வதில் ஆக்ஷேபமென்ன? குடி பழகிக்கொண்டவர்கள் அக்குடியால் வரும் கெடுதிகளையெல்லாம் பிரத்தியக்ஷ அனுபவத்திற் கண்டும் அக்குடியைச் சிறிதும் விலக்க முயற்சிக்கின்றார்களா? இல்லையே! துன்பத்தின்மேல் துன்பம் வரினும் மதுபானமே இன்பமென்று மகிழ்ந்து தன்னை மறந்து சன்னதங் கொண்டிருக்கிறார்கள். இதற்கோருதாரணம் அடியிற் கூறுவோம். [தொடரும்.]

நட்புக்கோடி.

# ஞானம்பாள்.

## இரண்டாவது அத்யாயம், வரவும் அதிர்ஷ்டமும்.

ராம்! ராம்!! மஹராஜ்!!! நாம் அதிக நேரம் எதிர் பாத்தோம். ஏது இத்தனை நாழிகை? உட்காரலாம்! என வீரசிங்கு கூறினான்.

“தாங்கள் உட்காருங்கள் ஜமேதார்! எனக்கு இத்தனை மரியாதை செய்வது பயத்தை யுண்டு பண்ணுகிறது.” என்று ராம்தாஸ் என்னும் சாவகாரி கூறிவிட்டு கொள்ளைத்தலைவன் உட்கார்ந்ததும், தானும் பக்கத்தில் உட்கார்ந்தான். உடனே கொள்ளைத்தலைவன் பேசத்துவக்கினான்.

வீரசி:—தாங்கள் வருகையில் மழை பொழிந்ததோ? அப்படியானால் நனைந்திருக்க வேண்டுமே?

ராம்தா:—மழை பெய்த சமயம் யான் வெளியேறவில்லை. பிற்பாடு சந்திரோதயம் ஆனவுடன், இவ்விடம் வரலா மெனப் புறப்பட்டேன். யானின்றி தான் தங்களுக்கு ஒன்றும் ஓடாதே? எனப் புன்னகை புரிந்தான்

வீர:—சரி! அது கிடக்கட்டும். சில சமயங்களில், என்னுடைய சாவகாரிகளே! என்னை மோசப்படுத்தப் பார்க்கிறார்கள். அப்படியானாலும் அவர்களை நம்பாமல் தீரவில்லை. அதிருக்கட்டும். எவ்வளவு தொகை கொண்டுவந்திருக்கிறீர்? நான் கொடுத்த சாமானுக்கு ஜாப்தா என்கையிலிருக்கின்றது.

ராம்:—ஆ! ஜமேதார்! என்னுடைய சிறு கிராமத்தில் தங்கமும், வெள்ளியும் என்ன விலையாகப் போகிறது? முத்துக்கள் விலையே யாக வில்லை. இவ்வளவு அவசரத்திற்குள் விற்க முடியுமா?

வீரசி:—சரி! சரி!! என்ன கொணர்ந்திருக்கிறாய்? என் ஆட்களெல் லாம் குடித்து வெறிகொண்டு சண்டைபிடிக்கிறார்கள். அவர்களை நம்பக் கூடவில்லை. சீக்கிரம்! எவ்வளவு!!

ராம்:—(புன்சிரிப்போடு) இங்கே கணக்கிருக்கின்றது. பணம் குதி ரை மீது மூட்டையில் இருக்கிறது. எண்ண வேண்டாமா?

வீரசி:—போதுமானது! எனக் கூறி, சாவகாரியின் கையிலிருந்த கணக்கைப் பிடுங்கிக்கொண்டு "எவ்வளவு" என்று கேட்டான்.

ராம்:—அப்படியானால் மஹாராஜ்! எல்லாம் சேர்ந்து விற்றது மொ த்தம் இரண்டாயிரத்து அறுநூற்று நாற்பது ரூபாயாகிறது. அந்த நாலு மூட்டைக்கும் சேர்த்து.

வீர:—ஆ! பொய்யும் பிரட்டுமா? கூறுகின்றனை! உன் கணக்குப்படி யே பார்த்தாலும் கூட ஆயிரம் ரூபாய் மேல் வரும்படி யிருக்கவேணு மே? நீ திருடனென்று நன்றாய்த் தெரிகின்றதே! மேலேயுமிருக்கலாம். இப்படி நீ செய்ததற்கு என்னுடைய ஆட்கள் பலியிட மாட்டார்களா? என்ன சொல்லுகிறாய்?

ராம்:—ஓ! மஹாராஜ்! என்னைப் பயப்படுத்தவேண்டாம். மன்னிக்க வேண்டும். நானோ எளிய பலவீனன். என்னுடைய சம்பாத்தியமோ மோசடியானதென்பது தங்களுக்குத் தெரிந்ததே. நான் சொல்வதெல் லாம் உண்மையென்று ஜகதீசன் மீது ஆணையிடுகிறேன்.

வீரசி:—இதோ! உற்றுக்கேள்! எது எப்படியிருந்தாலும், இப்போது 1000ரூபாய்க்கு கைச்சீட்டு யெழுதிக்கொடு. விலையாகாத சர்மானுக்கு இ து ஆதாரமாயிருக்கும்.

ராம்:—பிரபுவே! நன்றாய் யோசியுங்கள்! என்னுடைய தரித்திரத் தின் மீது தயைசெய்யுங்கள்.

வீர:—நான் மோசம் போகவில்லை. நண்பனே சீக்கிரம் எழுதுவாய். தக்ஷணமே சாவகாரி மிகுந்த மனக் கிலேசத்துடன் சீட்டெழுதினான். உடனே தலைவன் நான் வேண்டும்போது இப்பணத்துக்கு வருவேன். ஞாபகமிருக்கட்டும்.

ராம்:—மஹாராஜ்! நான் கூறுவதைக் கேளுங்கள். என் வியாபாரத் தில் கொஞ்சம் உஷார்க்குறைவா யிருப்பேனாயின், சிறைச்சாலையே வீ டாகக் கொள்ள வேண்டியிருக்கும்.

வீர:—ஆஹா! ஹா! ஹா! (எனச் சிரித்துக்கொண்டு) இவ்வளவு பே டியா நீ. இவர்களால் என்ன ஆகும்! நானிருக்கிறேன். பயப்படுவதனு வசியம். (இன்னும் வரும்.) K. S. வைத்தியநாதய்யர்.

# ஆரோக்கிய மார்க்கங்கள்.

(முன் தொடர்ச்சி.)

இரவும் பகலும் ஓய்வொழி வில்லாமல் வேலைசெய்வதினால் ஆரோக் கிய மழிந்து ஆயுட் க்ஷீணம் வந்து சேரும். வேலை வித்தை யில்லாமல் சோ ம்பேறித் தனத்தில் மூழ்கி யிருப்பதும் அற்பாயுளுக்குக் காரணமாகும். சங்கீதத்தினால் ஆயுள் விருத்தி சித்தியாவதோடுகூட வாழ்கிருக்கும்

காலமெல்லாம் சந்தோஷமும் கூடியிருக்கும். பெரிய பெரிய பட்டணங்களிலிருப்பவர்கள் அப்போதப்போது பச்சையான பயிர்கள் முதலியன செழித்திருக்கும் பள்ளிப்புறங்களுக்குப் போய்க் கொஞ்சகால மிருப்பதினால் உல்லாசமும் சந்தோஷமும் விளைவதோடு சரீரமும் மனமும் கூடச் சுகப்படும். அநேக தேசங்களைப் பார்த்து வருவதினாற் கூட ஆயுள் விருத்திப்படும், பிரயாணத்தினால் உண்டாகும் சந்தோஷமும் அவ்வந்தப்பிரதேசங்களிலிருக்கும் விநோத விசித்திரங்களைப் பார்ப்பதினால் ஆனந்தமும் மனதில் நிறைந்து அறிவைமறப்பிக்கும். சவுக்கியமும் அதிகரிக்கும். வேளைக்கு ஸ்நானமாவது, சோறுவது, துயிலாவது கிடைக்காமல் சகல விதமான கஷ்டங்களையும் பட்டுப் பிரயாணம் செய்வதினால் ஆயுள் விருத்திக்குப் பதிலாய் ஆயுட் சீண முண்டாகும். அமைதி, திருப்தி, தயவு, சிநேகம், உற்சாகம், தைரியம்—இவை சந்தோஷத்தைப் பிறப்பித்து ஆயுளை விர்த்தி செய்யும். முக்கியமாய் விருத்தாப்பியத்தில் சந்தோஷத்துடன் கூடியிருக்கு மிடத்து ஆயுள் விருத்தி யடையும். பேராசை, அருவெருப்பு, பகை, உற்சாகமின்மை, நிராசை, விசாரம், சஞ்சலம், துக்கம், கோபம், பயம்,—இவற்றினால் சீவகசக்தி கெட்டு ஆயுட் சீண முண்டாகும். முக்கியமாய் மரண பயத்தை வைத்துப் பாராட்டக் கூடாது. இதனால் ஆயுள் குன்றுவது போல வேறெதினாலும் குன்றாது. இவ்வச்ச மிருப்போருக்கு எவ்வித சுகங்களாயினும் சந்தோஷத்தைத் தூண்டமாட்டா. எந்தவேலை செய்த போதிலும் என்ன நேரிடுமோவென்னும் சம்சயமானது இடை விடாது வருத்திக் கொண்டிருக்கும். அடிக்கடி மரண பயத்தைப் பாராட்டுபவர்கள் சீக்கிரமாய் பரலோகபதவி யடைவார்கள். கிரகஸ்தாசிரமம் அதாவது இல்லற வாழ்க்கையானது ஆயுள் விருத்திக்குச் சாலவும் அனுகூலமானது. அதினால் மனம் சஞ்சலப்படாமலிருப்பதே யன்றிச் சந்தோஷமும் சவுக்கியமும் அதிகப்படும். புருஷனுக்குப் பெண்ஜாதிக்குறைவு போன்றது மற்றேதுமில்லை. எத்தனை சவுக்கியங்களிருப்பினும் பெண் திக்கில்லாதவனுக்கு ஆழ்ந்தறியாக் குறைவு தோன்றிக் கொண்டிருக்கும். உலகத்தின்மீது ஆசையின்மையும் அருவருப்பும் பிறக்கும். கணவி கணவர்களின் அந்யோன்னியநேசத்தைக்காட்டிலும், தாய் தந்தையர்களுக்கும் குழந்தைகளுக்கும் உள்ள பரஸ்பர பிரியபந்தத்தைக் காட்டிலும் இனிமையானது இவ்வுலகத்தில் வேறியாதுளது? இந்தப் பிரேமாமிர்தத்தைக் காட்டிலும் ஆயுள் விருத்திக்குப் பரமௌஷதம் மற்றேதுண்டு? குணவதியாயிருக்கும் மனைவியையும் சற்குணமுள்ள சந்தானத்தையும் பெற்று ஆரோக்கிய மார்க்கங்களைக் கவனித்து நடக்கும் மனுஷியன் சாலக்காலம் ஜீவிப்பதன்றி எக்காலும் ஆனந்த சமுத்திரத்தில் நீந்திக் கொண்டும் சுகதரங்களில் ஓலமாடிக்கொண்டுமிருப்பான். (முற்றிற்று.) M. S.

# பக்தியோகம்.

(முன் தொடர்ச்சி.)

இப்படிப்பட்ட பாண்டித்துவத்தினால் ஞானத்தையடைய விரும்புகிற சிஷ்யனுக்கு யாதொரு பிரயோஜனமுமில்லை. பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஓர் கதை சொல்வார். அதாவது சில மனிதர்கள் ஓர் மாந்தோட்டத்திற்குட் சென்று அங்கே யிருக்கும் மரங்களையும் அ

வைகளிலுள்ள கிளைகளையும் பழங்களையும் எண்ணிக்கொண்டிருந்தார்கள்.
அவர்களெல்லோரிலும் புத்திசாலியான ஒருவன் தோட்டக்காரனை மெ
ள்ளச் சிநேகஞ் செய்து கொண்டு, அவனிடமிருந்து பழங்களை வாங்கி
யுண்டு பசி தீர்ந்தான். இதைப்போல ஞானியானவன் பதங்களைக் கவனி
யாமல், ஆத்மா ஒன்றையே நாடி சதா விசாரணை செய்கிறான். வீணான
வாயாடிகள் காரியத்தில் உபயோகமற்றவர்களாயிருக்கிறார்கள். நாம்இப்
பொழுது ஆசாரியர்களுடைய லக்ஷணங்களைப் பற்றி சில கூறுவாம். ஆ
சாரியருக்கிருக்க வேண்டிய மற்றொரு குணம் பாவம் செய்யாமை. சி
லர் ஆசாரியன் பாவஞ் செய்தா லென்ன; புண்ணியம் செய்தாலென்ன;
நாமேன் அவருடைய நடத்தையைக் கவனிக்க வேண்டுமென்பார். ஆசா
ரியன் குணா குணங்களைக் கவனியாமல் அவர் சொல்வதை மட்டும் கவனி
ப்போ மென்பது தப்பு. ஏதேனும் ஓர் புதிய சாஸ்திரம், அங்க கணிதம்
முதலிய புஸ்தகங்களைக் கற்றுக் கொடுக்கும் ஆசாரியர்களானால், அவர்க
ளின் நடத்தையைப்பற்றி நாம் கவனிக்க வேண்டியதில்லை. ஆனால் மத
சம்பந்தமான ஞானத்தை யுபதேசிக்கும் குருவிடம் பாவ காரியங்களிருக்
குமானால், நாம் கெட்டுப்போவோ மென்பது நிச்சயம். பாவியான ஒரு
வன் மதபோதனை செய்ய அருகனன்று. ஆனதினால், மத விஷயத்தில்,
மட்டும் முதலில் ஆசாரியன் எப்படிப்பட்டவனென்று தெரிந்த பின்னர்
அவன் உபதேசிப்பதைக் கவனிக்கவேண்டும். பணத்தையாவது, கீர்த்தி
யையாவது பெருமையையாவது உத்தேசித்து கற்பிக்கும் ஆசாரியன் ஞா
னாசாரியனன்று. உலகத்தினிடத்தில் கொண்ட பிரீதியாலும் கருணையா
லும் மதாசாரியர்கள் பிரசங்கம் செய்ய வேண்டும். அப்படிப்பட்ட கருத்
தில்லா ஆசாரியனிடத்தில் உபதேசம் பெறுவதும் பிரயோஜன மற்றது.
ஆகையால் நன்குணர்ந்த ஆசாரியனிடம் பயின்று, பக்தியை எந்நாளும்
பகவானின் பாதார விந்தத்தில் சேர்ப்பித்து உடல்நெக்குருக ரோமஞ்
சிலிர்ப கண்களில் ஆனந்தபாஷ்பம் சொரியக் கடவுளைப்போற்றி நற்க
தியடையஎந்நாளும்முயற்சித்தால் நாம்பெறற்கரிய பேறுகளிலொன்றும்.
பத்தியே பரமசாதனம். முத்திக்கு வித்து சித்தசுத்தியான பக்தியேயாம்.

(இன்னும் வரும்.] K. S. செல்லமய்யர்.

# பொருள்.

கடல் சூழ்ந்த இப்பூவுலகத்தின் கண் உண்டாக்கப்பட்ட நால்வகை
த்தோற்றம் எழுவகைப் பிறப்பினுளடங்கிய எண்பத்துநான்கு லக்ஷம் ஜீ
வ்ராசிகளில் சர்வோத்கிருஷ்டமாகிய மானிடப் பிறப்பையடைந்தால்
மீண்டும் ஜனனமரண துன்பங்களுறாத வகையைக் கைக்கொண்டொழு
குதலே மேன்மை. அதாவது புருஷார்த்தங்களாகிய அறம்,பொருள்,இன்
பம், வீடு என்னும் நான்கில் முதலாவதாகச் சொல்லப்பட்ட அறமும்
மூன்றாவதாகச்சொல்லப்பட்ட இன்பமும் சரியாய் நடத்திவர இன்றிய
மையாத துணைக்கருவியாயுள்ளது இரண்டாவ்தாகச்சொல்லப்பட்ட பொ
ருளே. அப்பொருளில்லாவிடின் "வடுவிலாவையத்து மன்னிய மூன்றில்
நடுவணதெய்த இருதலையும் எய்தும், நடுவண் தெய்தாதான் எய்தும் உலை
ப்பெய், தடுவெத்போலுந்துயர்", என்றவாறு பலவிதத்தாலும் துன்பமுண்
டாமென்பதில் சிறிதும் ஐயமில்லை. இதுயாவருக்கும் பிரத்தியக்ஷ அனு

போகமாயுள்ளது. அப்படிப்பட்ட பொருளைச் சம்பாதிக்குமிடத்து மெய்வழியைத்தழுவவேண்டுவது முக்கியமான விஷயம். பாவத்திற்கு ஏதுவான காரியங்களைக்கொண்டு பொருள் தேடல் மிகவும் அநுசிதம். தன்குலாசாரத்திற்கும் மற்ற யோக்யதைக்கும் குறைந்த காரியங்களைச் செய்தாவது மதுமாம்சம்விற்றல் சூதாடல் திருடல் ஒருவனுக்குஹிதமான வார்த்தைகளைச் சொல்லி நம்பும்படியாகச் செய்து மோசம் பண்ணுதல் முதலியதீச்செயல்களைச் செய்தாவது பொருள் சம்பாதித்தால் பழியும் பாவமும் உண்டாகும். எவ்விதத்திலாவது பொருள்கிடைத்தால் சரியென்று நினைப்பது கொடுமையினும் கொடுமையே. கள் சாராயம் குடிப்போர் மதிமயங்கி நன்மைதீமை அறியாது தடுமாறுகின்றனர். சோற்றுக்காக ஒருபணம் யாசக மூலமாய்ச் சம்பாதிப்பவன் சோற்றுக்கு வேண்டியன வாங்காமல் குடித்து வருந்துகின்றனன். விற்பவரில்லையெனின் குடிப்பவருமுண்டோ? குடியினால் சூது திருட்டு முதலியன செய்து இராஜதண்டனைக்குப்பாத்திரராகிப்பின்பு தேவதண்டனைக்கு மாளாகின்றனர். மதுபானம் செய்வோரைக்கண்டு இத்தீச்செயல் செய்யுலாமாவென வினவினால் ஔவையாரே "குணமது கைவிடேல்" (குணமுள்ளதாகிய மதுவைக் கைவிடாதே) என்று சொல்லி இருப்பதால் தோஷம் யாதுமில்லையென்று அவர்களுக்கு அனுகூலமானவிதமாக அர்த்தம் செய்துநியாயம் சொல்லுகின்றனர். (குணம்+அது) என்றுபதம்பிரிக்கவேண்டியதைவிட்டு (குணம் + மது) என்று பதம்பிரித்துக் கொண்டு தள்ளாடுகின்றனர். தங்களுக்கிஷ்டமான வழியில் பதச்சேதம் பண்ணிக்கொள்கிறதென்ற நியாயம் போலும். இலக்கணத்தில் புணரியல்விதி யிவர்கட்கனுகூலமாக அமைந்திருப்பதாய் ஆனந்தங் கொள்கின்றனர். அந்தோ! இவர்கள் விதி தலைவிதியே. குடிப்போர் கெட்டுப்போகக் காரணபூதமா யேற்பட்டுப் பொருள் தேடல் கூடாத விஷயம். மாம்சபக்ஷணமாகா தென்று பெரியோர்கள் பலவாறாக முறையிடுகின்றனர். "கொல்லா விரதங் குவலயமெல்லா மோங்க, எல்லார்க்குஞ் சொல்லுவ தென்னிச்சை பராபரமே," "கொல்லா விரதமதைக் கொண்டோரே நல்லோர் மற்றல்லாதார் யாரோ அறியேன் பராபரமே," என்று தாயுமானசுவாமிகளும், "புலையுங் கொலையுங் களவுந் தவிர்,, என்று ஔவையாரும் மற்றும் பட்டணத்துஸ்வாமிகள் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் முதலாயினோரும் திருவாய்மலர்ந் தருளி யிருக்கின்றனர். அப்படியிருந்தும் கற்றோரிலும் பெரும்பான்மையோர் மாம்ச பக்ஷணம் செய்கின்றனர். கல்லாத மூடர் விஷயத்தைப்பற்றிக் கவலைப்படுவது அனாவசியமேயன்றோ? ஆடு கோழி முதலியவற்றை உயிர் துடிக்கும்படி வாளோங்கி வெட்டி மாம்சபக்ஷணம் செய்து பாவத்திற் குள்ளாகின்றனர். இவர்கட்கும் காரணபூதமா யேற்பட்டுப் பொருள் தேடுதல் கூடாது. உயர் குலத்தினராயினும் மற்றெக்குலத்தவராயினும் நீதிசாஸ்திர ஆராய்ச்சிசெய்து இவ்விஷயங்களைப்பற்றித் தீர்க்காலோசனையோடு நன்னெறியைக் கடைப்பிடித்து நடப்பதே மேன்மை. பொருளீட்டலொன்றிலேயே மனதைச்செலுத்தவொண்ணாது. நளசக்கரவர்த்தியும் பஞ்சபாண்டவர்களும் சூதாடித் தமது இராஜ்யத்தை யிழந்து பட்ட பாட்டை யார்தாம் கல்வி கேள்விகளா லறியாதார்? சிலர் அநியாயவழியில் கடன் கொடுப்பது, (அதாவது, கடன் வாங்குவோன் தன் அவசர நிமித்த மாகக் கேட்ட வட்டி கொடுக்கச்சம்மதித்தாலும் கேட்டுக்கொண்ட தொகைக்குத் தக்கவிதமாகக் கொஞ்சம் பிடித்

துக்கொண்டு பத்திரத்திற் கண்ட தொகை முழுதுங் குறைவறவட்டியு
டன் செலுத்த வேண்டுமென்ற கண்டிப்பாய்ச் சொல்லிக் கொடுத்தல்),
நூற்றுக்கு இரண்டு மூன்றெனவட்டியேற்படுத்தல், முதலிய துன்பங்கள்
செய்து எத்தகையோரையும் மான பங்கப் படுத்தித் தரித்திரஸ்திதிக்கு வ
ரும்படி செய்துவிடுகின்றனர். தர்ம சாஸ்திரத்திற்கு விரோதமாய் நடப்
பது குறைவு. ஸ்வயலாபத்தையே முக்கியமாய்க் கருதிப் பிறரைக் கெடு
க்க முயலுவது பாவத்திற் கிடமே யொழிய வேறொன்றுமில்லை. எப்பொ
ழுதும் எப்படிப்பட்டவரும் மேலான குணத்தை வகிக்க வேண்டுமே
யொழிய அற்பகுணத்தை வகித்தல்கூடாது. அப்படியாயின் பழிப்பும்
பாவமுமாம். கம்பீரமுள்ள யானையின் மேல் ஒருவன் பாணப்பிரயோக
ஞ்செய்து ஒருக்கால் அது தவறிப்போனாலும் பெருமையுண்டாமேயொ
ழிய இழிவுண்டாகாது. குள்ள நரியின் மீது பிரயோகம் செய்து அத
னைக் கொன்று விட்டாலும் பெருமை யேதேனுமுண்டோ? அது போ
ல் ஒருவன் தன் செல்வத்திற் கஞ்சிக் கீழ்ப்படிந்து நடப்பவனைப் பலவி
தமான துன்பத்திற் குள்ளாக்கிப் பொருளீட்டுவதாற் பயனென்னை?
பெருந்தகையோர் பிறரைக் கெடுக்கத்துணியாமலும் ஏழைகள் விஷய
த்தில் இரக்கப்பட்டுத் தம்மாலியன்றமட்டும் உதவி செய்து கொண்டும்
வரவேண்டும். சிலர் குபேர சம்பத்தினரென யாவரும் மதிக்கத்தக்கதா
க வாழ்ந்தாலும் அவர்கள், தங்கட்குக் கீழடங்கினவர்கள் ஒருவர்க்கொ
ருவர் ஏதோ வொரு காரணார்த்தமாக வழக்கிட்டுக்கொண்டு தங்களிட
ம் நியாய முடிவுக்காக வந்தால் இருதிறத்தாரிடமும் பொருள்பறித்துக்
கொண்டு ஒருவிதமாய் வழக்குத்தீர்த்து விடுகின்றனர். சிலர் பெண்க
ள்மாட்டுத் தூது சென்று பொருள் தேடுகின்றனர். சிலர் பசியென்று
வந்தவர்க்கு அன்ன முதவாமலும் தாங்களும் சுகபோஜனம் செய்யாமலு
ம்நல்லவஸ்திரமுடுக்காமலும் பொருள் தேடுகின்றனர். "உடா அது மு
ண்ணாதுந் தம்முடம்பு செற்றுங், கெடா அத நல்லறமுஞ் செய்யார்—
கொடா அது, வைத்தீட்டினாரிழப்பர் வான்றோய் மலைநாட, உய்த்தீட்டு
ந்தேனீக்கரி" என்று நாலடியாரிற் கூறியதை நன்குணர்ந்திலர் போலு
ம். இப்படிப் பற்பலர் பற்பலவிதமாகக் கெட்டவழியில் பொருள் தேடுகி
ன்றனர். பஞ்சபாண்டவர்கள் சுகமாய் வாழக் கூடாதென்றும் தான்
மட்டும் சுகமாய் வாழவேண்டு மென்றும் சூது நினைத்துத் துரியோ
தனன் அவர்களைப் பலவிதமான துன்பத்திற் குள்ளாக்கின னன்றோ!
பின்பு அவன் தானது கிளைஞரோடு அடைந்த கதியாது? இதனைத்தெ
ரிந்திருந்தும் இக்காலத்திலும் மோசஞ்செய்து கெட்டவழியில் பொரு
ள் தேடுவோரும் தர்மவழியில் பொருளைச்செலவிடாதோரும் நசித்துப்
போவதைப் பிரத்தியக்ஷ அநுபோகமாகக் கண்டிருந்தும் சிரஞ்சீவியாயி
ரோமென்பது தெரிந்திருந்தும் பலவாறு தீச்செயல்கள் புரிந்து இழிவா
ன வழியில் பொருள் தேடுகின்றனர். அந்தோ! கலிகாலக் கொடுமை
யையென்னென்று சொல்வோம் நன்னெறி தீநெறிமுதலியவை முன்
யுகங்களிலும் உண்டென்றாலும் இக்கலிகாலக் கொடுமைக்கு எக்காலக்
கொடுமையும் ஈடாகாது,

(இன்னும் வரும்)

திருச்செங்கோடு. } சே. சு. விசாகப்பெருமாள்முதலியார்.

# தமிழ் பாஷை.

(முன் தொடர்ச்சி.)

அன்றியும் "தமிழ் தற்பாஷையே. கிளைபாஷை யன்று" எனற்குப் பூர்வாசிரியர் கிழ்வாய்க் கணக்கிற்கும், விரவியல் செய்யுட்கும், மணிப்பிரவாளத்திற்கும், வேற்றுமை வகுத்த இலக்கணமே சாக்ஷி பகருமே. இம்மட்டோ?

"இருமொழிக்கும் கண்ணுதலார் முதற்குரவர் இயல்வாய்ப்ப
இருமொழியும் வழிப்படுத்தார் இயல்வேந்தர் இசைபரப்பும்
இருமொழியும் ஆன்றவரே தழீஇயினர். என்றால் இவ்
இருமொழியும் நிகரென்னும் இதற்கையம் உளதேயோ?"

என்ற காஞ்சிபுராணச் செய்யுளும்,

"வடமொழியை பாணினிக்கு வகுத்தருளி அதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை உலகமெலாம் தொழுதேத்தும்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகர் எனில்
கல்வரப்பின் இதன்பெருமை யாவரே கணித்துள்ளார்?"

என்ற திருச்செய்யுளும் வடமொழியும் தென்மொழியும் ஒன்றினொன்று சற்றும் பெருமையில் தாழாத தனிப்பாஷைகள் என்பதற்கோர் தனிச் சான்றாகும்.

உண்மை ஈதாக, தமிழ் இலக்கணக்கடல் முழுதும் உண்டவரும், தமிழினை வளர்க்கும் திருவாவடுதுறை மடத்தவருமான ஸ்ரீமத் சுவாமிநாத தேசிகர், தமிழ் மொழியுடன் வடமொழி சம்பந்தம் மிக்கு இருத்தலால் மயங்கி,

"அன்றியும் தமிழ் நூற்கு அளவிலை அவற்றுள்
ஒன்றே யாயினும் தனித் தமிழ் உண்டோ"?— என்றும்

"அன்றியும் ஐந்து எழுத்தால் ஒரு பாஷை யென்று
அறையவும் நாணுவர் அறிவுடையோரே"— என்றும்

கூறி மாழ்கினர். இவருடைய முதற்கேள்விக்கு உத்தரமாக, காலஞ் சென்ற ஸ்ரீமாந் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் தற்கால முற்கால செய்யுள்களில் சில எடுத்துக் காட்டி இவற்றுள் வடசொல் எங்கே? சங்கநூல்களிலும் ஏனைப் பின்னூல்களிலும் ஆரிய மொழி எத்துணை சிறு பான்மைய?" எனச் சமாதானம் கூறினர். "ஆயினும் ஸ்ரீமத் சுவாமி நாத தேசிகர் கேட்பது "ஒன்றே யாயினும் ஸம்ஸ்கிருத வார்த்தை உபயோகிக்கப் படாத தனித்தமிழ் "நூல்" உண்டா?" என்பதே யொழிய செய்யுள் உண்டா?" என்பதன்றே. ஆகையால் இவரது உத்தரம் "புறநடையானே பொது விதி விளங்கும்" என்ற உண்மையையே மெய்ப்பிக்கிற தெனச் சிலர் பிதற்றித் திரிகின்றனர். இப்பேதை மாக்கள் பிள்ளையவர்களின் இரண்டாவது கேள்வியை மறந்தே விடுகின்றனர். நாம் பழைய நூல்களிற் காணப்படும் ஆரியமொழிகளையும் திராவிட மொழிகளையும் கணக்கிட்டு ஆராய்ந்து பார்ப்போமே யானால், ஒரு நூலானது எவ்வளவுக் கெவ்வளவு பழமையாக இருக்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு ஆரியமொழிக் குறைவைக் காணலாகும். இதுகொண்டு ஒரு காலத்தில் தனித் தமிழ் நூல்கள் பல இருந்தே இருக்கின்றன, என்று துணிந்து கூறற்குத் தடை என்ன இருக்கிறது? "இருந்திருப்பின் இப்பொழுது,

அவைகள் எங்குபோயின? என்று சிலர் பரிகஸித்துக் கேட்கக்கூடும். இக்கேள்விக்கு விடையைக் கேட்போரே இவ்வியாசத்தில் பிறிதோரிடத்திற் கண்டுகொள்வர். நிற்க.

தேசிகரது இரண்டாவது கேள்விக்கு விடையாய்த் தாமே ஓரிடத்தில் "பொது எழுத்தானும் சிறப்பெழுத்தானும் ஈரெழுத்தானும் இலங்கும் தமிழ் மொழி" என்று கூறி யிருக்கின்றாராதலின், அவர் தம் வாக்கையே மறந்து இங்ஙனம் உரைத்தது வடமொழிப் பயிற்சியேமிக்குடையோராய் அதன் மேற்கொண்ட பேரபிமானத்தினாலேயே எனக்கொள்க. அதிமதி நுட்பமோ டதிகலை கற்ற இவர் இவ்வாறு முக்குண வசத்தால் முறை மறந்துரைத்ததால், தமிழை ஒரு மொழியென நிறுவிய மகத்துவம் மிகுத்த அகத்தியனார்க்கும், ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியர்க்கும், பொன்னார் செஞ்சடைத் தென்னவர்பிராற்கும் அறியாமையேற்றிப் பழிபாவம் தேடினார் என்று பலர் நிந்திக்கலாயினர். இவ்வாறு மயங்கி இடர்ப்பட்டத நிமித்தம் இவ்வதி மேதாவியே தமிழைப் பற்றிய உண்மையறிந்தோரால் நாளைவரைப் பெரிதும் இழிக்கப்படுகின்றாராக தமிழைப் பற்றிய உண்மையே ஒரு சிறிதும் உணராதார், யாவும் தெரிந்தார்போன்று, அதனை இழித்துரைக்கமுன்வருவது எத்துணை இழுக்குடைத்து! என்ன பாருங்கள்! சின்னாட்களுக்கு முன் சர்வகலாசாலைச் சங்கம் (University commission) ஏற்பட்டுப் புன் மொழியாப் பைந்தமிழைப் புறம்பே தள்ளி பூவுலகோர் தம் மனத்தைப் புழுங்கச் செய்ய, பற்றியெரியும் தீக்குக் காற்றும் கூடியது போல், பண்டித S. M. நடேச சாஸ்திரியார் போல்வார் முன் போந்து "தமிழ் மொழிகள் யாவும் நேராகவேனும் சிதைவுற்றேனும் ஸம்ஸ்கிருதத்தினின்றும் தோன்றியவை தாம் என்று மதிராஸ் மெயில் வாயிலாய் வெளியிட்டது எவ்வளவு பரிதபிக்கத்தக்கது! "வண்ணஞ் செய்வாள் விழியே யன்றி மறைகுருட்டுக் கண்ணஞ் சுமோ இருளைக்கண்டு?" மதுரைத் தமிழ்ச்சங்க வித்வான்களில் ஒருவராகிய சாஸ்திரியார் இவ்வணம்உரைப்ப ஸ்ரீமாந் A. மாதவையா B.A. மட்டுமே யன்றி புறப்பாஷை பேசும் ரெவரண்ட் டாக்டர் மில்லர் போன்ற பாதிரிமார்கள் அதனை மறுத்துப் பேசியது எவ்வளவு பாராட்டத் தக்கது!

தமது ஆயுள் காலம் முழுதும் தமிழ் கற்பதிலேயே செலவழித்துவரும் ரெவரண்ட் G. U. போப் அவர்களுக்கும் அதனைத் தம்மாலியன்றளவு கற்றுணர்ந்து அகாராதியெழுதி "தமிழ் கிரேக்க பாஷையினும் நயமான செய்யுள் நடையுடையது; லத்தீன் பாஷையிலும் பூரணமானது" என மனப்பூர்வமாகத் தமது அபிப்பிராயத்தை வெளியிட்ட வின்ஸ்லோ பண்டிதர்க்கும், "மனிதரால் பேசப்படுகின்ற மிகப்பொலிவும் திருத்தமும் சீருமுடைய பாஷைகளுள் தமிழும் ஒன்று" என்று ஆய்ந்தறிந்த ரெவரண் W. டேலருக்கும், "Tamil is the only vernacular literature in India.........which has honourably attempted to emulate and out shine SANSKRIT என்ற கால்ட்வெல் துரைக்கும் ஏனைத்தமிழாராய்ந்தோர்க்கும் அன்றோ இப்பாஷையின் அருமை பெருமை தெரியப்போகிறது? அந்நிய நாட்டுப் பண்டிதர்க்குள்ள அபிமானமும், உண்மையறிவும், நம் நாட்டார் பலர்க் கில்லாமற்போனது வியப்பிற்கும் நகைப்புக்கும் இடமாகிற தன்றோ?

(இன்னும் வரும்).

M. கோபால கிருஷ்ணையர்.

# விவேகம் தந்திரம் ஞானம்.

விவேகத்தினால் ஒருவன் தனக்கும், பிறர்க்கும் எஜமானனாவான். எதிரியின் குணா குணங்களை மட்டிட்டு அவனைத் தன் வசப்படுத்துவான். கல்விமான், தைரியசாலி, தந்திரி இவர்களை விட, விவேகியே எச்சாதிக்கும், எக் குடும்பத்திற்கும் தலையாவான். சபைகளில் முதன்மை பெறுவதும், ஊராரை ஒரு நெறிப்படுத்துவதும், விவேகியின் வல்லமையே விவேகமில்லாத மனச் சாதுரியம், கண்ணில்லாத திரிதராஷ்டிதனுடைய தேக பலத்துக்கு சரி. ஒருவனுக்குச் சகல வரமும், சம்பூரணமாகவிருந்தும், விவேக மொன்றில்லாவிட்டால், உலகத்திற்கு அவனால் ஒரு பிரயோஜனமுமில்லை. மற்ற லக்ஷணங்கள் குறைந்திருந்தாலும், சம்பூரண விவேக முள்ளவனே தன் காரிய மனைத்திலும் சித்தி யடைவான்.

மனுஷிய குணங்களுக் கெல்லாம், விவேகம் சிரசாகும். தந்திரமோ அற்பத் தன்மையுடையது; இழிந்தகுண முடையவரிடத்தும், லோபிகளிடத்தும் உற்பத்தியாவது. விவேகம் மேன்மையை முன்னிட்டு, புகழோடு சம்பந்தப்பட்டு, உத்தம வழியிலே சென்று, அரிய பெரிய காரியங்களை நிறைவேற்றும். தந்திரம், சுய நயத்தையே கருதி, ஒரு வழியிலும் நில்லாது. விவேகம், தூர திருஷ்டியுடையதாய், சகல திசையையும் ஒருமிக்கப் பார்த்து மட்டிடும். தந்திரம் சமீப திருஷ்டியுடையது; கையிலுள்ள பொருளை மாத்திரம் வெகு நுட்பமாய்ப் பார்க்கும்; தூரப்பொருள் அதன் கண்ணுக் கெட்டாது. விவேகம் யாரிடத் துறையுமோ, அவர்களுக்கு அதிகார சம்பத்துண்டாகும்; அவர் சமுகம் யாவராலும் வாஞ்சிக்கப்படும். தந்திரங் குடியிருக்கப் பெற்றவனைச் சகலரும் தள்ளிவைப்பார்கள். ஈஸ்வரனைச் சாரினும், முக்குணம் இழுக்கென்பது பற்றியன்றோ கபட நாடக சூஸ்திரி யென்று வசையாகச் சொல்வது; தந்திரியின் ஜாலம். அவன் குணத்தை அறியாதவனிடத்திற் பலிக்கும். விவேகியின் வல்லபம் அவனை அறிந்தோரிடத்திலே தானே அதிகப்படும். தந்திரியின் வழி பிறரறியக் கெடும். விவேகியின் மார்க்கம் வெளி நின்று ஜொலிக்கும்; சூரியன் எழும்ப எழும்ப அதன் பிரகாசம் அதிகமாக ஜ்வலிப்பதுபோல, விவேகம் எவ்வளவு வெளி வருமோ அவ்வளவு, அதன் பலன் அதிகப்படும். விவேகம் யுக்தியின் பூரணம்; வாழ்நாட் கடலுக்கு வல்ல மாலுமி. தந்திரம் இயற்கைக்குணம்; தற்கால வினையையே கருதுவது, விவேகம் நேரே வேரோடி, விழுது விட்டிருக்கும் விருக்ஷாதியை யொப்பது. தந்திரம் வித்தின்றி தானாய் முளைத்துத் தன்னிலே மடியும் புல்லுருவிக்கு நிகராகும். விவேகம் கல்விமான்களிடத்தும், கூரிய புத்திசாலிகளிடத்தும் பிறப்பது: தந்திரம், மிருகங்களிலும், மிருகத் தன்மையரிடத்தும் காணப்படுவது; குறுகி வளைந்து கோணல் செறிந்த விவேகமே தந்திரமாவது. நேர்மையிலும், வல்லபத்திலும், விவேகிக்கும், தந்திரிக்கும், வெகு வித்தியாசமுண்டு. தந்திரியின் மார்க்கம் கோணல்வழி யென்பதைஇரண்டொரு உதாரணத்தால் திருஷ்டாந்தப்படுத்துவாம்.

பேசக் கருதிய விஷயத்தை ஒருபோதும் நேரே பேசுகிறதில்லை, எதிரியின் மனதுக்குப் பொழுது போக்காக, அவனுக்கிதமாகிய பல இனிய மொழிகளுடன் விஷயங்களைப் பேசிக்கொண்டிருந்து, மெதுவாகத் தன் காரியத்தை நுழைப்பதே தந்திரியின் தொழில். அவசரக்காரனுக

கு புத்தி மட்டாதலால், தந்திரி தன் எதிரியின் அவசர வேளைகளில் அவனைக்கண்டு தன் கைவசப்படுத்துவான். ஏலங் கூறுகையிலே, தான் கருதிப்போன பொருளில், பிறர் கண்போட்டிருக்கக் கண்டால், தான் அதை வாங்க வாராதவன்போற் பாவனை காட்டி, அப்பொருளின் குணத்தை மிகவுங் குறைத்துப் பேசுவான்; கடையிலே தான் கொள்ளப்போன சாமான்களை விட்டு அவைகளைத் தான் வாங்க வாராதவன்போல், நடித்துப் பிற சாமான்களுக்கு விலை பேசிக்கொண்டிருப்பான். தான் நூதனமாய்ச் சொல்வதொன்றை, உலக வதந்தி யென்றுரைப்பான்; சடுதி; ஆலோசனை யறியாதாதலால், எதிரியைச் சட்டென, மடங்கச்செய்வான். எதிரிக்குக் காட்டுவதொருவழி, அவனைக் கொண்டுபோய் விடுவது வேறொருவழி. தந்திரி சாக்ஷியம் பகர்வதை, நியாய துரந்தரர்கள் மடக்கிக் கேட்கும் குறுக்குக் கேள்விகள், எத்தன்மைத் துடையன வென்பதை, நீதிஸ்தலங்களில், காலாந்தரத்திற் காணலாம். தந்திரம் ஒருவழி பட்டதல்ல. இப்படிக் கோடானு கோடி பேதமுண்டு. இதற்கென்று தனி வழி யென்ப தொன்றில்லை. மித்திர பேதம் முதலான பஞ்ச தந்திரோபாயங்களே தந்திரி செல்லும் வாகனங்களாம். தன் சுயக் கால்களால் நடக்கும் சக்தி இவனுக்கில்லை. சிலர் தந்திரத்தின் மணமும் தங்களில் இல்லாதிருக்க, வெகு தந்திரிகள்போல் நடிப்பார்கள். அவர்களைக் குறித்து, நாமிங்கு சொல்ல வந்தோமில்லை. அவர்கள் யாவர்க்கும் சிரிப்புக் கிடமாவதன்றி, அவாகளாலாவது வேறொன்றுமில்லை. துடி துடிப்பு வார்த்தை சீக்கிர புத்தியாகாது: மோனம் ஞானமாகாது: உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது: அதுபோல, எவ்வளவு சாதுரியத்தோடு தோற்றினாலும், தந்திரம் தந்திரந்தான். விவேகத்திற் கிணையாகவே மாட்டாது.

வலைஞனுக்கு எப்போதும் மிதப்பிலே கண்ணென்றாற்போல, விவேகிக்கு எந்த வேளையிலும், எக்காரியத்தைச் செய்கையிலும் மாய்கையாகிய மயக்கத்திலே தன்னைச் சிக்க வொட்டாமல், பேரின்ப முத்தியிலேயே கண்ணாகவிருப்பான். இப்படிப்பட்ட விவேகியைத்தான், ஞானியென்று சொல்லுவர்.

ஞானம் ஈஸ்வர குணம். அவர் தன்மை அக்குணத்திற்குமுண்டு. அடியார்க் கெளியவரும், அன்பர்க்குத் தோழருமாகிய அன்னவரின் குணமும் தன்னைத் தேடுவார்க்கு லேசாய் அகப்படும். தன்மேல் நேசமுடையோரைத் தாயினும் பிரியாத் தோழமை கொண்டு நீங்காதிருக்கும். சம்பூரண அநுக்கிரக, இயல்பு செறிந்த ஞானம், தன்னை யொருக்காற் றேடுவாரைத் தானிருகாற் றேடிவரும். அதனைத் தேடி ஒரு அடி வைக்கு முன்னே, அது ஒன்பது அடி தூரம் எதிர்கொண்டு நிற்கும். இளம் பிராயத்தில் அதனை நாடுபவர்களுக்கு அது மிகவும் லேசாய் அகப்படும் அவர்கள் நெடுந்தூரம் போகவேண்டியதில்லை. கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தாற்போலவும், வலிய தேடிவருஞ் சீதேவி போலவும், வாசலிலே காத்துக் கொண்டிருக்கும். தனக்குரியாரைத் தானுய்த்தொடரும். விவேகியின் சிந்தனையே ஞானத்திற்கு ஆரம்பமாம், அதனைப் பாதுகாப்பவாக்கு அணுவளவுந் தொல்லையில்லையாம். அது என்றும் வாடாத புஷ்பம். அணிய அணிய நீரேறும் விலை பெற்ற இரத்தினம். மிருக லக்ஷணம் தந்திரம், கல்வியின்பயன் விவேகம். விவேகத்தின் முடிவு ஞானம்.

தஞ்சைபுரிநேசன்.

# சரித்திரப்பயிற்சி.

(முன் தொடர்ச்சி.)

சேது முதற்கொண்டு இமயமலை வரைக்கும் பரவி இருப்பதாயும். இருபக்கத்திற் கடலாற் சூழப்பட்டதாயும், சகலமான சாஸ்திரங்களுக்கும், உற்பத்திஸ்தானமாயும், புண்ணிய ஸ்தலங்களும் ஆலயங்களும் நிறைந்துள்ள இடமாயுமிருக்கின்ற பரத கண்டமாகிய இந்த க்ஷேத்திரமானது ஆங்கிலேயர்களாலும் அவர்கள் மொழியிற் பயிற்சியுள்ளவர்களாலும் இந்தியாவென்று சொல்லப்பட்டு வருகிறது. கோதற்ற சரிதையுள்ளவனாய் ஒப்பற்ற பலமும் பராக்கிரமும் வகித்திருந்த பரதனென்றும் பேருள்ள அரசன் ஒருவன் முற்காலத்திலிருந்தான்; அவன் துஷ்யந்தன்என்னும் மன்னனுக்கு மகன். அவன் அறிவாலும் திறமையாலும் விரோதி அரசர்களுடைய கூட்டத்தைக் கீழ்ப்படுத்தி இத்தேயத்தவர்களை தன் புகழாகிய வெண்குடைக்கீழ் நிழற்றினனென்று புராணங்கள் மொழிகின்றன. ஆதலால் இத்தேயத்திற்குப் பரதகண்டமெனப் பெயர் வந்தது. இவ்வரசனுக்கு முன்னால் வெகுகாலம் இத்தேசமிருந்த் ஆண்மையும் குறைவிலாச் செல்வமும் குடிகளின் வறுமைக்கு வறுமையுண்டாக்கும் நாட்டமும் சரண மடைந்தவர்களை இரக்ஷிக்கின்ற பெருந்தன்மையுமுள்ள மன்னர்களாற் காப்பாற்றப்பட்டு வந்ததென்றும் தெரியவருகிறது. துஷ்யந்தன் மகன் பரதன் காலத்துக்குப் பின்னாலிருந்த அரசர்களும் "மனிதர்களாற் செய்தற்கறிய செயல்களுடையவர்களாயும், தங்கள் பிரதாபத்தினால் கொளுத்தப்பட்ட பகைவர்கள் கூட்டத்தை யுடையவர்களாயும், நீதி தவறாது செங்கோலோச்சினவர்களாயும், அயல் நாட்டரசர்கள் வியக்கத்தக்க நல்லொழுக்க முள்ளவர்களாயும், தங்கள் தண்ணருளென்றும் பேராற்றினால் குடிகளென்னும் பயிர்களைச் செழிப்பித்தவர்களாயும் மறை நெறிக்கிசைந்தவர்களாயும் இவ்வாரியாவர்த்தத்தை ஆண்டார்கள், என்று புராணங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. இம்மாதிரியாக இப்பூமியானது நல்லரசர்களின் பரிபாலனத்தால் களிப்படைந்ததாயும், தத்தம் நெறிதவறாத பல வருணத்தவர்கள் வாழப் பெற்றதாயும் மென்மேலும் வளருந்தன்மையுடைய வடமொழி நூல்களால் அலங்கரிக்கப்பட்டதாயும் கூறப்பட்டுளது. பராசர் புத்திரர் வியாசர் வேதத்தைப் பரிசோதித்து அறியாமையாற் கிடந்துழலும் பலருக்கு உபயோகமாகும் பொருட்டு பதினெட்டு புராணங்களையும் சந்திர வம்சத்தரசர் சரித்திரமாகிய மாபாரதத்தையும் செய்தது இக்காலத்தில் தான். சொற்சுவையுள்ள பாவலர்களிலெல்லாம் முதன்மை பெற்ற வால்மீகி இத்தேசத்தவர்களின் கவித்திறமையை வெளிப்படுத்துகின்ற சூரிய குல சரித்திரமாகிய இராமாயண மென்னும் காவியத்தைச் செய்ததும் அக்காலத்தில் தான். நான்கு வருணங்களையு மேற்படுத்தி, சர்வ ஜனசம்மதமான நீதிநூலைப்பயிற்றிய எல்லாம் அறிந்த மனுவும் இவ்வுலகில்தோன்றியதும் அக்காலத்திற்றான். திருமகள்கணவனாகிய நல்லோரைக் காப்பாற்றும் கருணைக் கடலாகிய எல்லா உலகங்களிலும் இருப்பவர்களைப் பாதுகாப்பதை விரதமாகக் கொண்ட பகவானாகிய திருமாலும், கொடிய ஒழுக்கமுள்ள இருள் மலிந்த ஹிருதயர்களான அசுரர்கள் அரசர்கள்முதலியவர்களை தன்னுண்மையாகிற தழலுக்கு விறகாகச்செய்யும்பொருட்டு இப்பூவுலகில் மீனன்வராகம்முதலிய பலஉருவமாக அவதரி

த்து அடியார்க்குதவி புரிந்தார், தீயோர்களை அழித்தா ரென்பது அக்கால த்திற்ருனென்றும் புராணங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றன. மிகுதி யாகக் கூறுவதிற் பயனென்னை? இவ்வாறே கிருதயுகம், திரேதாயுகம், து வாபரயுகமென்ற மூன்று யுகங்களிலும், கருணையால் இவ்வுலகிலவதரித்த தேவதைகளும், அனுக்கிரக வசத்தால் மாகாத்மியத்தைப் பெற்ற மனித ர்களும் பலசட்டங்களை ஏற்படுத்தி நன்ருய் சிறிது சிறிதாக முயன்று க டைசியில் பேரின்பமே வடிவாகக்கொண்ட கடவுளை யோகியானவன் கா ண்பது போல உயர்ந்த பதவியை யடைந்தது.

மிக்க கொடிய ஆலா அலமாகிய பெரும் நஞ்சைப் போல பொருத் தற் கரிய தீயவொழுக்க மலிந்த கலிகாலமாகிய காரிருள் பரவுங் காலத்தி லேயும், பிறர்க்குதவி செய்தால் களிப்படையும் உள்ளத்தவர்களாயும் அ ன்னியமதங்கள் நெருங்கும் காலத்துத் தங்கள் மதத்தை முன்னுக்குக் கொண்டுவருங்காரியத்தில் நாட்டமுள்ளவர்களாயும், மிக்க மழையின்மை, பெருங்காற்று, பெரும் நோய் முதலிய நிபாதங்கள் உண்டாகுங்காலத்தி ல் குடிகளைக் காப்பாற்றும் பொருட்டு, தம்மாலானதைச் செய்தும், தங்க ள் பொருள் தனை எல்லாம் கொடுத்தும், பிறகு மந்திரிமார் முதலிய உத் தியோகஸ்தர்கள், புதல்வன் முதலிய உறவினர்கள், பிறகு பெண்சாதிமு தலியவர்களை யிழந்தும் மீண்டும் வேறு வழியில்லாமையால் தம்முயிரையு ங் கொடுத்து தம் வாழ்விற்கும் நாட்டின் வாழ்விற்கும் வித்தியாசமறியா மலிருந்த தேவர்களேஎன்று சொல்லத்தக்க பல அரசர்கள் ஆண்டார்க ளென்றும் புராணங்கள்கூறுகின்றன. (இன்னும் வரும்.)

T. V. கிருஷ்ணசாமி சாஸ்திரி.

# கலாப் பிரகாசனி.

## முன் தொடர்ச்சி.

இங்ஙனமாக 7 வருஷங்கள்கழிந்தன. பிறகு சுகுணமாலினிக்கும் கலாலங்கிருதருக்கும் விவாகம் வெகு விமரிசையாக நடந்தேறியது. இதற் கு மேலும் 2 வருஷங்கள் சென்றன. சுகுணமாலினி கர்ப்பமடைந்து நவ மாச பரிபூரணமாகி தச மதியில் நல்ல சுபமுகூர்த்தத்தில் ஒரு பெண் குழந்தையைப் பெற்ருள். அக்குழந்தைக்கு நவமாலிகை என்று பெயரிட் டு வளர்த்து வருகையில் அதற்கு அணிந்திருந்த நகைகளின்மீது ஆசை கொண்டு அரண்மனையிலிருந்த சேவகர்கள் நால்வரும் ஒன்று கூடி யோசித்து இரவில் அனைவரும் நித்திரை செய்துகொண்டிருந்த தருணம் பார்த்து அக்குழந்தையை எடுத்து அவ்விடத்திலிருந்த ஒரு பெட்டியில் வைத்து ஒரு கயிற்றினல் கட்டி மேல் மாடியிலிருந்து கீழே மெதுவாய் நேராக இருந்த ஒரு மரத்தின்மேல் இறக்கினர். அத்தருணம் அம்மரத் தில் உட்கார்ந்து இன்றிரவு எவ்விடத்தில் திருடலாமென்று யோசித்துக் கொண்டிருந்த திருடனொருவன் இப்பெட்டியைக் கண்டதும் ஆசை கொண்டு இதில் ஏதாவது இருக்கலாமென்றெண்ணி அப்பெட்டியை எடுத்துக்கொண்டு வெகு சீக்கிரத்தில் பட்டணத்தைக் கடந்து ஒரு காட் டில்பிரவேசித்தான். இடையில்கானுறென்று குருக்கிட்டது. சிறிதுஜல ந்தான் இருக்குமென்றெண்ணி எப்படியோ அதிக கஷ்டத்துடன் நடு ஆற்றிற்கு வந்து விட்டான். ஜலப் பிரவாகம் அதிகமாயிருந்ததால் இவ னல் நிற்பதற்குக் கூடவில்லை. கடைசியில் தன் உயிருக்கே மோசம்

வரும்போல் தோன்றிற்று. கழுத்தளவு ஜலமிருந்தது போய் தலைக்குமேலும் வந்தது. பார்த்தான் திருடன். யோசித்தான் சிறிது நேரம். தன்னுயிரைக் காப்பாற்றிக் கொள்ளுவதே மேலெனத் தோன்றிற்று. உடனே பெட்டியை ஆற்றில் விட்டுவிட்டு தான் மட்டும் நீந்திக்கொண்டு சென்றான். நிற்க அரண்மனையில் மெதுவாகக் கதவைத் திறந்துகொண்டு நால்வரும் மரத்தின் மீதேறிப் பார்த்தனர். கயிறுமட்டு மிருந்தது. பெட்டியைக் காணோம். பல இடங்களில் தேடினர். அகப்படவில்லை. பிறகு ஒன்றும் தோன்றாமல் திகைத்து இங்கிருந்தால் மோசம் வருமென்றெண்ணி அந்த இராத்திரியே கமலாபுரியை விட்டு ஓட்டமெடுத்தனர். பிராதக்காலமாயிற்று: சுகுணமாலினி தன்னருகில் நவமாலிகையைக் காணாததால் பயங்கொண்டு தன் நாயகனுக்குத் தெரிவித்தாள். உடனே பல இடங்களிலும் தேடினர். மனிதர்களால் எவ்வளவு பிரயத்தினங்கள் செய்ய முடியுமோ அவ்வளவும் செய்து பார்த்தனர். அகப்படவில்லை. சுகுணமாலினி படும் துன்பத்தை யெடுத்துரைக்க யாவரால் முடியும்.

நிற்க கிருபாலோசனன் எனும் வேடனொருவன் வனமெலாஞ் சுற்றித் தன்னாகாரத்திற்கு வேண்டிய காய் கனிகளைச் சேகரம் செய்துகொண்டு ஒரு ஆற்றினருகே வந்தான். இவன் கண்ணிற்கு ஏதோவொன்று புலப்பட்டது. உடனே நதியிற் குதித்து நீந்திக்கொண்டு சென்றதில் பெட்டி ஒன்று மிதந்து போய்க்கொண்டிருப்பதைக் கண்டு அதைக் கரைக்கு இழுத்துக்கொண்டு வந்து பெட்டியைத் திறந்து பார்த்தான். ஜகஜ்ஜோதிர்மயமான ஒரு ஸ்திரீ சிசு சர்வாபரணாலங்கார பூஷிதையாய் நித்திரை செய்துகொண்டிருந்தது. அப்பெட்டியில் ஒரு கடிதமும் இருக்கக் கண்டு வாசித்துப் பார்த்து சகல விஷயங்களு முணர்ந்து ஆனந்தக் கண்ணீர் விட்டான். பிறகு அக்குழநதையை எடுத்துக்கொண்டுபோய் என்ன பெயரிடலாமென்று யோசித்துக் கடைசியில் அக்குழந்தையின் விரலில் போட்டிருந்த மோதிர மொன்றில் நவமாலிகை என்று இருக்கக்கண்டு அப்பெயரையே அவளுக்கு வைத்து வேத சாஸ்திர புராணேதிஹாசமாதியனவும் கற்றுக்கொடுத்து வெகு பிரீதியுடன் வளர்த்து வந்தான். நவமாலிகைக்கு 17வது பிராயம் நிறைந்து 18வது வயதும் பிறந்தது. மாளவ தேசத்து அரசனாகிய ஞானபரணன்மீது கிருபாலோசனர் அதிக பிரியம் வைத்திருந்தார். அவ்வரசனும் அவருடைய பிரியத்தை அபிவிர்த்தி செய்துகொண்டே வந்தான். இப்படி யிருக்கையில் ஒரு நாள் ஞானபரணனும் நவமாலிகையும் தற்செயலாய் ஒருவரை யொருவர் சந்தித்துக்காதல்கொள்ளலாயினர். இவ்விஷயம் கிருபாலோசனர்க்குத் தெரிந்ததும் அவர் அதிக சந்தோஷத்துடன் விவாகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்தார். மாளவ தேசத்தில் ஞானபரண மகாராஜாவுக்கும் நவமாலிகைக்கும் பாணிக்கிரகண மகோற்சவம் அதியுன்னதமாய் நடந்தேறியது. கிருபாலோசனர் சின்னாளளவும் நகரத்திலிருந்து பிறகு விடை பெற்றுக்கொண்டு கானகம் சேர்ந்தார். தம்பதிக ளிருவரும் வெகு அந்நியோன்னியமாய் வாழ்ந்து வந்தனர். [தொடரும்.]

## நித்திரை.

இவ்வுலகின் கண், நமக்கு இன்றியமையாதிருக்கப் பெற்றவஸ்துக்களுள் தூக்கமும் ஒன்றேயாம். தூக்கமேயில்லாமல் ஒருமனுஷ்யன் 40 நாட்களுக்கு மேல் ஜீவித்திருப்ப தரிதெனக் கற்றுத் தேர்ந்த பெரியவர்களி

லொருவர் கூறியுள்ளார். இவ்வுலகின் கண் நன்கு வாழத் தூக்கமும் முக்கிய சாதனங்களுளொன்றே. "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷம்" என்று கேளாதோர் ஒருவருமில்லை. எதுவும் தத்தம் அளவுக்கு மேற்படின் தீமையை விளைவிக்கக்கூடியதே. ஏற்பட்டுள்ள அளவுக்குக்குறையினும் சிற்சில வஸ்துக்கள் துன்பத்தைப்பயக்குவதா யிருக்கிறது. சரியான விளக்கொளிகண்ணுக்கு இன்பத்தைப்பயக்குகிறது. அதிகவெளிச்சம் கண்ணுக்கு இனிமையைப்பயவாதிருப்பதுடன் துன்பத்தையும் விளைவிக்கிறது. வெளிச்சம் குறையினும் பார்க்கக் கஷ்டமாயிருக்கு மென்பதை சொல்லாமலே யாவருமறிவார்கள். சப்தங்களின் சுபாவமும் இவ்வண்ணமே சிற்சில சப்தங்கள் காதைக்கூட செவிடடையச்செய்து விடுகின்றன. தேகப்பயிற்சியும் இவ்வகைத்தே. மிதமிஞ்சிச் செய்வோமாகில் வருத்தமடைய வேண்டுவதுதான். தூக்கமும் அப்படியே, அதிகத்தூக்கம் துக்கத்துக்குக் காரணமே. சோம்பலை மேவிடச்செய்யும். அசதியை உண்டுபண்ணும், தேகத்துக்கும் அசௌக்கியத்தை உண்டாக்கும். தூக்கம் குன்றினும் துக்கத்துக் கேதுவாம். "அனந்தலாடேல்" என்ற ஔவைமொழி யாவருமறிந்தது. இவ்வாக்கியத்துக்குச் சிலர் தூங்கவே கூடாதென பொருளுரைக்கிறார்கள். அவ்வகைப் பொருள் இவ்வாக்கியத்துக்குப் பொருந்துமெனத்தோன்றவில்லை. சிந்திப்பதிலும், சங்கல்பம் செய்வதிலும் மூளை வேலை செய்கிறதென்பதை யாவருமறிவார்கள். "மூளையே அறிவுக்குஸ்தான" மென்று பலர் சொல்லக் கேட்டிருக்கிறோம். மூளை என்பதென்னவென்று சற்று உற்று நோக்குவாம். மூளை கபால அறையிலிருக்கும் ஒருஇந்திரியமாம். அவ்வறையினுள் விருந்து அவ்வறையை மூடிக்கொண்டிருக்கும் நரம்புப் பிண்டமெனக் கூறலாம். அது சற்றேறக்குறைய 7 அங்குல நீளமும், 5 அங்குல அகலமும் 50 அவுன்ஸ் நிறையுமுள்ளதென கூறு சாஸ்திர ஆராய்ச்சிக்காரர்கள் கூறியுள்ளார்கள். (கபால அறை என்பது நாலாபக்கங்களிலும் எலும்பாலாகி மண்டைமீதுள்ள ஓரறை). இந்நரம்புப்பிண்டம் இரு போர்வைகளால் மூடப்பெற்றுள்ளது. ஒரு போர்வை கபால அறையின் மூடிஎலும்பின் உட்புறத்தை யொட்டினதாயும், மற்றொன்று மூளையின்மேற் பாகத்தை ஒட்டினதாயுமிருக்கிறது. ஏதேனும் கெடுதல்களிலிருந்து சொல்பவளவு மூளைகளைக் காப்பாற்றுவதற்கு மட்டும் இவ்விதமான போர்வைகள் ஏற்படவில்லை. மூளைக்குப் போகிறதும், மூளையிலிருந்து வருகிறதுமான இரத்தக்குழாய்கள் அப்போர்வையினூடு தான் செல்கின்றன. மூளை அதிக வெண்மையில்லாத நிறத்துடன் கூடிமிருதுவாயிருக்கின்றன. நமது சங்கல்ப யோஜனைகளில் இந்த மூளை முயற்சியுடனிருந்து சிரமப்படுகிறதாம். சிரமபரிகாரம் பண்ணிக்கொள்வது அம்மூளைக்குச் செல்லும் இரத்தக் குழாய்களிலுள்ள இரத்தத்தினாலேதானென சாஸ்திர ஆராய்ச்சிக்காரர்கள் கூறியுள்ளார்கள். மூளை தேகத்தின் 50-ல் ஒரு பாகமிருப்பினும், அதற்களிக்கப்படும் இரத்தம் நமது தேகத்துக்களிக்கப்படும் இரத்தத்தின் 8ல் ஒருமடங்காம். மூளை சிரமமடைய சிரமமடையபுதிய இரத்தம் அடிக்கடி அளிக்கப்படவேண்டுவது ஆவசிகமே.

(தொடரும்) S. N. ஸ்ரீனிவாசன்.

ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய ஸ்வாமிகள் சரித்திரம்:—இப்புத்தகத்தைப்பற்றிய அபிப்பிராயம் மறுமுறை வெளிப்படும்.